# ஒலி மாசு

புவியெங்கும் பலவகை மாசு எனும் அசுத்தம் ஒவ்வொரு வினாடியும் பெருகிக் கொண்டு போகிறது. இவற்றில் நிரந்தர மாசு மற்றும் தற்காலிக மாசு என்ற வகைகளில் மாசுகளை பிரிக்கலாம். நீர், காற்று (வாயுமண்டலம்) ஆகியவற்றில் உண்டாகும் மாசுகள் நிரந்தரமாகக் கலந்து சங்கிலித்தொடரிலான பாதிப்புகள் ஏற்படுத்துகின்றன. இவற்றின் முக்கிய பாதிப்பு விளைவுகளான நன்னீர் குறைபாடு, ஓசோன் மண்டலம் வலிமையிழந்து சூரியக்கதிர்களின் வீச்சு வெப்பம் கூடுதலாக பூமியை சேர்தல், உயிர்காற்றாகிய பிராணவாயு குறைதல், மனிதர்களுடன் தாவர விலங்குகளுக்கும் பல தொற்று நோய்கள் போன்றவை பாகுபாடு இல்லாமல் பாதிக்கின்றன.

இது ஒருபுறமிருக்க அதிக ஒலி இரைச்சல் மாசு என்பது மனித விலங்கு உயிரிகளை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு ஏராளமானக் காரணிகள் காரணமாகின்றன. தொழிற்சாலைகள், நல்ல மற்றும் ஓட்டை வாகனங்கள், அபரிமிதமான மனித வாயொலிகள் போன்றவை இதற்கு ஒரு வகையானக் காரணமாகின்றன. இதில் பழசாகிப்போன தொழிற்சாலைகள், வாகனங்கள் அவைகளுக்குரிய இயல்பை விட சுமார் நான்கு மடங்கு கூடுதல் உலோக ஒலிகளை எழுப்புகின்றன. இவற்றுள் ஓட்டை வாகனங்களைப்பற்றி கேட்கவே வேண்டியதில்லை. அடுத்தது, கூடுதலான மனித வாயொலிகள் – இது இருந்து தொலைந்துவிட்டு போகட்டும்; ஏனெனில் நாம் இதை ஒன்றும் கட்டுப்படுத்திவிட இயலாது.

ஆனால் இவற்றிற்குள் வராத அதே நேரம் அவ்வளவு அவசியமில்லாத சிலவகை ஒலிக் கூடுதல்கள், குறிப்பாக இந்தியா போன்ற அரைகுறை நாடுகளில் எங்கேயும் அதிகமாக திணிக்கப்பட்டு அதன் குடிமக்களை கொடுமைப்படுத்திக் கொண்டுருக்கின்றன. இதன் வரிசையில் முதலாவதாக, மேல்நாட்டுக்காரர்கள் கண்டுபிடித்த மின்சாரம், பாட்டரி, ஒயர், ஸ்பீக்கர், குழாய் ஒலிப்பான்கள், ஆம்ப்ளிபயர் ஆகியவற்றின் தொகுப்பை இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என்ற எந்த ஒரு நியதியும் இந்த நாட்டில் எங்கேயுமில்லை. ஆரம்பத்தில் மைக், ஸ்பீக்கரை கண்டுபிடித்தவர்களுக்கு பின்னாளில் இது இந்தனை மடங்கு ஒலி அளவு உண்டாக்கும், பல மனிதர்களை சித்திரவதை செய்யும் என்பது தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்பதாகத்தான் உணரமுடிகிறது. ஏனெனில் அவற்றை கண்டுபிடிப்பதற்குரிய நல்ல உள்ளம் கொண்ட அந்த மனிதர்கள், இதை உணர்ந்திருந்தால் வெளிக்கொணர்ந்திருக்கவே மாட்டார்கள்.

மற்ற பல கண்டுபிடிப்புகளின் கதையும் இப்படித்தான் இருக்கிறது. டெலிபோனை உருவாக்கிய கிரஹாம்பெல் மக்களின் நன்மைக்காகத்தான் அதை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அதனின் இன்றைய வளர்ச்சியில் நன்மையுடன் தீமைகளும் அதிகமாகி இருக்கின்றன. அதன் வளர்ச்சி அத்துறையைச் சார்ந்த கருவி தயாரிப்பாளர்கள் மற்றும் சேவை வழங்குபவர்களுக்கு வேண்டுமானால் நல்ல காசு பார்க்கும் களமாக இருக்கலாம். ஆனால் சமுதாய சீரழிவிற்கு இது பலமடங்கு வேலை செய்து கொண்டுருப்பதை பலர் உணர்ந்தும் உணராததுபோல பாவனை செய்கின்றனர். இச் சேவை இல்லாவிட்டால் இந்த உலகமே செயலற்று, வளர்ச்சியற்று இனப்பெருக்கமற்று அழிந்து விடுவது போல பேசுகின்றனர்.

இன்றைய மக்கள் நெருக்கம் அதனின் அதிக நடமாட்டம் இருக்கிற இக்காலச் சூழலில் இச்சேவை தேவைதான் என்கிற போதிலும், அதன் உபயோகத்தை கலாச்சார நாடு என சொல்லப்படுகிற இந்தியா போன்ற நாடுகளில் ஓரளவுக்கு கட்டுப்படுத்தத்தான் வேண்டும். என்றபோதிலும் இனிமேல் இது நடக்கப் போவதில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

குறிப்பாக கல்விக்கூட மாணவ, மாணவிகளுக்கு செல்போன்களின் அவசியமும், அதில் சேர்க்கப்பட்டுள்ள கேமிரா, வீடியோ போன்றவற்றின் உபயோகமும் மிக அவசியமா என்பதை சான்றோர்கள் கூறவேண்டும். இது இல்லாவிட்டால் படிப்பும், பாதுகாப்பும் கிட்டாதா? இதை இத்துடன் விட்டுவிட்டு அடுத்ததைப் பார்ப்போம்.

ஒலிபெருக்கி என்ற பொருளை என்னென்ன வகைகளிலோ எத்தனை பெரிதாக்கமுடியுமோ அப்படி அதனை உருவாக்கி அனைத்து சாதனைகளுடன் இணைத்து இருபத்திநான்கு மணி நேரமும் சகலமான இடங்களிலும் காட்டுக் கத்து கத்தவிட்டு இயற்கை தந்திருக்கும் அமைதியை இயன்ற அளவிற்கு எவ்வளவு இயலுமோ அதுவரைக்கும் கெடுப்பதற்கென இரைச்சல் எழுப்பி ஊரை பாடாய்படுத்துகிறார்கள்; ஒருநாள் சென்னையில் உள்ள ஒலிபெருக்கியின் ஒலி டெல்லியில் கேட்டாலும் ஆச்சரியமில்லை.

இன்னொருவகை பயங்கர இரைச்சலின் முதல்நிலைப் பங்காளியான பட்டாசு வேட்டுகளைப் பற்றி சற்று பார்ப்போம். இது எதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டது என்பதையே சரியாகக் கண்டுபிடிக்க இயலாநிலை நிலவுகிறது. இது உருவாக்கப்பட்டது மலை, பாறைகளை உடைக்கவா, காட்டு விலங்குகளை மனித குடியிருப்புப் பகுதிகளுக்கு வராமல் விரட்டுவதற்காகவா அல்லது பீரங்கி, துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அதனின்று வந்த ஒலியைப் போல செய்து அக்காலத்திலய சக மனிதர்களை, நாடுகளை மிரட்டுவதற்காகவா என்பது தெறியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது, அதாவது இந்த வேட்டுகள் இன்றைக்குப் பயன்படுத்தப்படும் தேவையில்லாத தேவைகளுக்காக மட்டும் நிச்சயமாக இல்லை என்பது!

சில பத்தாண்டுகளுக்கு முன்னர் வரைகூட தீபாவளி, திருவிழா, இதர கொண்டாட்டங்களின் போது ஒரு எல்லையோடு இருந்த அதன் எண்ணிக்கைகளின் அளவும் ஒலி அளவு வேகமும் தற்போது பல மடங்காகப்பட்டு ஒவ்வொருநாளும் மேலும் மேலும் வேகம் கூட்டப்பட்டுத் தயாரிக்கப்படுகின்றன. இதை மொத்தமாகத் தயாரிக்கும் நிறுவனங்களில் செய்யப்படுபவைகளின் ஒலி அளவைக் காட்டிலும் அந்தந்தப்பகுதியில் தயாரிக்கப்படும் பட்டாசு வேட்டுகள் அதிக ஒலி எழுப்பி அருகிலுள்ள பகுதிகளை அதிர வைக்கின்றன. இந்த அளவுக்கு பயங்கர ஒலி உண்டாகும் அதிர் பட்டாசு வேட்டுகள் சத்தியமாகத் தேவையில்லை. மேலும் அதில் வெட்டி பெருமைக்காக போட்டிப் போட்டுக்கொண்டு பெரும் காசைக் கரியாக்குகின்றனர்.

இதில் அரசியல்வாதிகளின் பங்கு அபரிதமானது மேலும் சிறு குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு ஆபத்து, பாதிப்பு போன்ற உண்மை நிலையை தாங்களாக அறியும் நிலையில்லாமல் ஒரு சாகச சாதனையைப் போல் கொண்டாட இதில் மனம் லயிப்பது நியாயமே. ஆனால் வளர்ந்த மனிதர்கள்தான் நல்லது கெட்டது, அளவு எல்லைகளை நிர்ணயித்து சமுதாயத்திற்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

சிலசமயங்களில் இந்த திடீர் அதிர்வேட்டுகளை பக்கத்தில் கவனியாமல், காதைப்பொத்தாமல் இருப்பவர்களுக்கு செவிப்பறை கிழிந்துவிடும் போல் பாதிப்பு ஏற்படும் சிறுகுழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள், அமைதியை விரும்புகிறவர்கள், தீவிரமாகத் தேர்வுகளுக்குத் படிப்பவர்கள் போன்றோரும் பாதிக்கப்படுகின்றனர் இங்கு அதிர் வேட்டுகள் வெடித்து சகமனிதர்களை பயமுறுத்துகிறார்களா அல்லது போர்புரிகின்றனரா? இவர்கள் எவ்வளவு மத்தாப்பு, வானவேடிக்கை வேண்டுமானாலும் கொழுத்தி கொண்டாடி பெருமை காட்டிக்கொள்ளட்டும். ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிக பட்டாசு வேண்டாம். மேலும் பட்டாசோ வானமோ ஊருக்கு ஒரு ஒதுக்குபுறத்தில் கொழுத்த வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துதல் நலம் பயக்கும்.

இந்த அதிர்வேட்டுகள் பல சுற்றுப்புற சக உயிர்களை அதிர வைத்து துன்பப்படுத்திக்கொண்டுருக்கின்றன. ஒலி பெருக்கிகளின் ஓயாத கடும் இரைச்சலினாலும் இவர்களுக்கு நிரந்தரத் தொல்லைகளே; இவைகள்அனைத்தும் காட்டுமிராண்டித் தனமான வாழ்க்கைச் சூழலையே உணர வைக்கிறது.

எனவே அரசுகள். காவல் துறை, நீதித்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் இலாக்காக்கள் இவைகளுக்கு ஒரு அதிகபட்ச அளவு எல்லைகளை நிர்னயித்து கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டியது இத்தருணத்தில் மிக அவசியமாகிறது.